

# ஆரோலேபில் தீ விபத்து

## தீயை விட வேகமாகப் பரவியது, உடனடியாக மீண்டு எழ வேண்டும் என்ற எண்ணமும் உழைப்பும்

ஆரோலேப், மதுரை



ஆரோலேபில் பணியாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே நெருக்கமான நம்பிக்கையும் ஒத்துழைப்பும் நிலவும் சூழலை காணலாம். எதிர்பாராத ஒரு விபத்து ஏற்பட்ட பிறகு, இந்த நம்பிக்கையும் ஒத்துழைப்பும் இன்னும் தெளிவாக வெளிப்பட்டன. விபத்தினால் உற்பத்தி இயந்திரங்களும் கணினி மற்றும் மின்சார சாதனங்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளானாலும், பணியாளர்களின் கூட்டு மனப்பான்மை உறுதியாகவே இருந்தது. அவர்கள் அசைக்க முடியாத ஒற்றுமையுடனும் நம்பிக்கையுடனும் செயல்பட்டனர். தங்கள் சொந்த குடும்பத்திற்கு நெருக்கடி ஏற்பட்டது போல் கருதி, சேதத்தைக் கட்டுப்படுத்தவும் இயல்பு நிலையை மீட்டெடுக்கவும் அயராது உழைத்தனர்.

ஜுலை 5, 2023, செவ்வாய்க் கிழமை காலை 6:30 மணி அளவில், IOL பாலிஷ் பிரிவில் திடிரென தீப்பற்றியது. லென்ஸை சுத்தம் செய்ய வைத்திருந்த கரைப்பானில் (Solvent) தீப்பற்றியது. தீயணைப்புக் கருவிகளைப் பயன்படுத்தி தீயை அணைக்க பராமரிப்புக் குழுவினர் பலமுறை முயற்சித்தாலும், கரைப்பான் (Solvent) எதிர்பாராதவிதமாக பரவியதால், தீ வேகமாக மற்ற பகுதிகளுக்கும் பரவியது. கடுமையான தீ, அறை முழுவதும் ஆக்கிரமித்தது. உடனடியாக, மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, பணியாளர்கள் அனைவரும் உடனடியாக வெளியேற்றப்பட்டு, நித்யதாவில் ஒன்று திரட்டப்பட்டனர். அனைவரும் இருக்கிறார்களா என சரிபார்க்கப்பட்டது. உடனடியாக தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டாலும் தீயணைப்பு வீரர்கள் வருமுன், உயர் அழுத்த நீரை தெளிக்கும் குழாய் (Fire Hose) மூலம் பராமரிப்பு குழுவினர் தீயை அணைத்தனர்.

இருப்பினும், தரைத் தளம் முழுவதும் புகை சூழ்ந்தது. இதனால் உள்ளே செல்ல முடியவில்லை. இதற்கிடையில், தீயணைப்புத் துறையினர் வந்து, புகையை அகற்ற கண்ணாடி ஜன்னல்களை உடைத்தனர். புகையை அகற்றும் முயற்சி சுமார் 30 முதல் 45 நிமிடங்கள் வரை நீடித்தது. காலை 11:00 மணியளவில், புகை முற்றிலும் வெளியேறியது. சேதங்களை மதிப்பிடுவதற்கு ஒரு காப்பீட்டு அளவர் (Insurance Surveyor) வரவழைக்கப்பட்டார். அதுவரை யாரும் உள்ளே நுழையவோ, எதையும் தொடவோ அனுமதிக்கப்படவில்லை. தீயை அணைக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டிருந்த, ஆரோலேபின் இரண்டு ஆண் பணியாளர்களுக்கு அருகில் உள்ள விக்ரம் மருத்துவமனையில் பரிசோதித்து தேவையான சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் அவர்கள் அதே நாளில் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த தலைமைக் குழுவினர் நிலைமையை மேற்பார்வையிட்டனர். உடனடியாக மீட்டிங் நடத்தப்பட்டு, ஒரு விரிவான மறுசீரமைப்பு திட்டம் வகுக்கப்பட்டது. வணிக செயல்பாடுகளை மீட்டெடுக்க முதல் முன்னுரிமை அளிக்கப்பட்டது. மாலைக்குள், Suturing (தையல்) பிரிவு மற்றும் Blade (பிளேடு) பிரிவுகள் போன்ற சில பிரிவுகள் செயல்படத்தொடங்கின.

மறுசீரமைப்பு முயற்சிகள் இரவு முழுவதும் தொடர்ந்தன, மதுரை-அரவிந்தின் இல்லப் பராமரிப்புக் குழுவினர் வந்து மறுசீரமைப்பிற்கு உதவினர். ஆரோலேபின் அலுவலக பணியாளர்கள் மற்றும் இல்லப் பராமரிப்புப் பணியாளர்கள் உட்பட அனைத்து பணியாளர்களும் 11:00 மணிக்கு மேல் தொழிற்சாலையில் இருந்தனர். சுத்தம் செய்யும் பணிகளில் சோர்வின்றி ஈடுபட்டனர். பேக்கிங் மற்றும் மெஷினரி பகுதிகள் மறுநாள் முழுமையாக சுத்தம் செய்யப்பட்டன.

பாதிக்கப்பட்ட IOL பகுதிகளில் பெரும்பான்மையான மீட்பு பணிகளை முடித்து, தேவையான பாதுகாப்பு செயல்பாடுகளை செய்து, ஜுலை 10ம் தேதி உற்பத்திப் பணிகளை பகுதியளவு தொடங்கினர். ஆர்டர் பெறப்பட்ட லென்ஸ்களுக்கு கையிருப்பில் உள்ள லென்ஸ்களைக் அனுப்பி வைக்கலாம் என்றும் அடுத்த 10-12 நாட்களுக்கு எந்த சிக்கலும் ஏற்படாது என IOL துறையின் தலைவர் சுந்தர் கணேஷ் தெரிவித்தார். பெறப்பட்ட ஆர்டர்களுக்கு ஏற்ப லென்ஸ்களை விநியோகிக்க முடியவில்லை எனில் பாதகமான விளைவுகள் ஏற்படக்கூடும் என்பதால், வெளிநாடுகளுக்கு சீரான விநியோகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்பட்டனர்.

எதிர்பாராத விதத்தில் விபத்து ஏற்பட்டாலும் விபத்திற்குப் பிறகு உடனடியாக வேலையைத் தொடங்குவதற்கான பணியாளர்களின் ஆர்வமும் ஈடுபாடும் சிறப்பாக வெளிப்பட்டது. தீயை அணைக்கும் முயற்சிகளின்போது புகை மற்றும் நீரின் கலவையின் விளைவாக இரசாயன ஈரப்பதம் இருந்ததால் பராமரிப்பு குழுவிற்கு சுத்தப்படுத்துவது ஒரு வலிமையான சவாலாக இருந்தது. இருப்பினும், மிகுந்த அர்ப்பணிப்புடன் சகஜ நிலையை மீட்டெடுக்க பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியையும் அயராது துடைத்து சுத்தம் செய்தனர். தீ விபத்தின் தீவிரம் அதிகமாக இருந்ததால் தீயை அணைக்கும் முயற்சியில் அனைவரது கவனமும் இருந்ததால் தீ பரவிய விதத்தையோ இடத்தையோ யாரும் புகைப்படம் எடுக்கவில்லை. தன்னலமற்ற தன்மையை வெளிப்படுத்தி பணியாளர்கள் குழுவாக செயல்பட்டு இரவு நெடுநேரம் வரை சுத்தம் செய்யும் பணிகளில் ஈடுபட்டனர்.

விபத்துக்களின்போது செயல்பட முன்னெச்சரிக்கை பயிற்சி மற்றும் ஒத்திகை பயிற்சிகளை ஆரோலேபில் ஆண்டுதோறும் நடத்தப்படுவதால், இதுபோன்ற அவசரநிலையை எதிர்கொள்ள முடிகிறது. இந்தப் பயிற்சிகள், பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு நெறிமுறைகளையும் சூழ்நிலையை திறம்பட கையாள்வதற்கான நடைமுறைகளையும் அளித்தன.

கட்டிடங்களின் தன்மையை மதிப்பிடுவதற்கும், பணியாளர்களுக்கு பாதுகாப்பான பணிச்சூழலை பராமரிப்பதற்கும் சீரான கால இடைவெளியில் தணிக்கைகள் நடத்தப்படுகின்றன. நிர்வாகத்தின் செயல்பாடுகளாலும் பணியாளர்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பாலும் தீ விபத்து நடந்தபோது நிலைமையை திறம்பட நிர்வகிக்க உதவியது.

எல்லாவற்றிற்கும் மேலாக, பணியாளர்களுக்கும் நிறுவனத்திற்கும் இடையே உள்ள வலுவான பிணைப்பால் அவசரநிலையை எதிர்கொள்ளவும், சேதத்தை குறைக்கவும் குறிப்பாக, அனைத்து பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் முடிகிறது.

aurolab







